STC.No.1086/2023 **PW1. திருமதி. நாகராணி**

தேதி– 07.12.2024

எதிரி ஆஜர்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் போடி .தர்மத்துபட்டி. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பாலமுருகன் சிறப்பு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறேன். எத்தனை வருடமாக வேலை பார்க்கிறேன் என்றால் 3 வருடமாக வேலை பார்க்கிறேன். அதற்கு முன்பு எங்கு வேலைக்கு போனேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் மணிவாசகம் மனைவி ஜெயபாரதி ஆகியோர் எனது உறவினர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மணிவாசகம் எனக்கு என்ன உறவு என்றால் கணவரின் சித்தப்பா, ஜெயபாரதி எனக்கு அத்தை . மணிவாசகமும், ஜெயபாரதியும் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் கொடுவிலார்பட்டி . எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் நாகலாபுரம்.

2) எதிரியும், நானும் எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 3 வருடத்திற்கு மேல். எனது ஊரில் இருந்து எதிரி ஊர் எத்தனை கி .மீ. இருக்கும் என்றால் தெரியவில்லை. எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் ஜெயபாரதி மூலம் பழக்கம். ஜெயபாரதி ஊருக்கும், எதிரி ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ. இருக்கும். எதிரியை எத்தனை முறை ஜெயபாரதி வீட்டில் வைத்து பார்த்துள்ளேன் என்றால் பலமுறை பார்த்துள்ளேன். எதிரி எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டதாக சொல்கிறேன் என்றால் 02.05.2023, ஜெயபாரதி வீட்டில் வைத்து கேட்டார் . 02.05.2023 தேதியை புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி பணம் கேட்கும் போது யாரு உடன் இருந்தது என்றால் ஜெயபாரதி உடன் இருந்தார்.

3) அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 6.00 மணி இருக்கும். ஜெயபாரதியின் கணவர் அப்போது இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. எதிரிக்கு, நான் பணம் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான் , எனது கணவர், ஜெயபாரதி, எதிரி ஆகியோர் இருந்தோம். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 11.00 மணி இருக்கும். அப்போது பணம் கொடுக்கும் போது, எதிரியிடம் காசோலை வாங்காமல் பணம் கொடுத்தோமா என்றால் ஆமாம். 5 லட்சம் பணம் எனக்கு எந்த சேமிப்பில் இருந்தது பற்றி எனது புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் . அவ்வாறு 5 லட்சம் பணம் வைத்திருந்ததற்கு ஆவணம் எதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வீட்டில் சேமித்து வைத்திருந்தேன்.

4) 5 லட்சம் பணம் எத்தனை ரூபாய் தாள்களாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாயாக கொடுத்தேன். அதில் எத்தனை 500 ரூபாய் தாள்கள் இருந்தது என்றால் 1000 தாள்கள் இருந்தது. எதிரியிடம் எத்தனை முறை பணம் திரும்ப கேட்டேன் என்றால் 4, 5 முறை. பணம் கொடுப்பதற்கு முன்பு எதிரி வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். யார் மூலமாக பணத்தை கேட்டேன் என்றால் ஜெயபாரதி மூலம் கேட்டேன் . ஜெயபாரதி கேட்டுவிட்டுஎதிரி என்ன சொன்னார் என்பதை புகாரிலும் , நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரியிடம் இருந்த எப்போது காசோலை வாங்கினேன் என்றால் 18.07.2023 தேதி வாங்கினேன்.

5) எங்கு வைத்து காசோலை வாங்கினேன் என்றால் எதிரியின் வீட்டில் வைத்து வாங்கினேன். காசோலை வாங்கும் போது யார் , யார் இருந்தது என்றால் நான், எனது கணவர், எதிரி, ஜெயபாரதி ஆகியோர் இருந்தோம். எதிரி வீட்டில் வைத்து காசோலை வாங்கியதாக எனது புகாரிலும் , நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரி எத்தனை மணிக்கு காசோலை கொடுத்தார் என்றால் மாலை 5.00 மணிக்கு கொடுத்தார் . எதிரி காசோலை கொடுக்கும் போது பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம் . மசாஆ1 காசோலையில் உள்ள கையெழுத்துக்கும் , எழுத்திற்கும், தொகைக்கும் கையொப்பம் வித்தியாசம் உள்ளதா என்றால் உள்ளது . காசோலை பணம் இல்லாமல் திரும்பி வந்த பின்பு எதிரியிடம் காசோலை திரும்ப வந்தது பற்றி தெரிவித்து பணம் கேட்டேனா என்றால் கேட்டேன் . எங்கு வைத்து எதன் மூலமாக கேட்டேன் என்பதை அறிவிப்பிலும் , புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) எதிரிக்கும், எனக்கும் பழக்க வழக்கம் கிடையாது என்றும் , எதிரிக்கும், மணிவாசகத்திற்கும் தான் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றும் , மணிவாசகத்திடம் எதிரி கொடுத்த காசோலையை அவர் இறந்த பின்பு அந்த காசோலையை மோசடியாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

<u>மறுவிசாரணை</u>–இல்லை.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

C PALANIVELRAJAN

Digitally signed by C PALANIVELRAJAN
Date: 2024.12.07 16:59:23 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.